# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 63/மா/2023**

**நாள் : 10.05.2023**

திரு. ரா. பிரான்சிஸ் அம்ப்ரோஸ்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி, தாம்பரம் – எதிர்மனுதாரர்

தாம்பரம் மாநகராட்சி, குரோம்பேட்டை, குமரபுரம் எண்.3ல் வசிக்கும் திரு. ரா. பிரான்சிஸ் அம்ப்ரோஸ் அவர்களின் 15.1.2023 நாளிட்ட மனு 18.01.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 63/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை :**

தாம்பரம் மாநகராட்சி, குரோம்பேட்டை, குமரபுரம், எண்.3ல் வசிக்கும் திரு. ரா. பிரான்சிஸ் அம்ப்ரோஸ் அவர்கள் தனது 15.1.2023 நாளிட்ட மனுவில் மற்றவற்றுக்கிடையில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

The Corporation/Municipality officials apart from CMDA – who are the prime addresses may take a stand that they relied upon a TSLR EXTRACT – which they seem to have got hold of from the applicant – viz – The Authorities of Amala Annai Aalayam in the month of September,2021, which has been mentioned in the TSLR Document for 1.24 Acres whereas the total area of encroached land is 3.12 Acres issued by the Revenue Department – Read – District Collector and his entire battery of team of officials down the line upto V.A.O.

How a structure of nearly 12000 Sq.feet with various amenities as combination of various Religious structures came up all along many a times built, demolished and rebuild

over a period of many years and of late many a times since 2012 to 2022 without any legal lien documents, CMDA approval, but on the contrary the Corporation/Municipality officials turn blind eye to all these happenings. It is also farce activity that the V.A.O. report ratified by various officials upto R.D.O. as vacant land on the date of issue of this DUBIOUS PATTA by the District Collector Shri.Rahul Nath on 14.09.2021 (which is under contention)

Under what surmising of approval and inference the various infrastructure activities were allowed to be carried out including the religious structures and many shopping complex had come up lest allowed to be constructed without any such mandatory documents of parent documents/patta/CMDA Approval/N.O.C. from the District Collector under section 6(4) of Tamil Nadu District Municipalities Building Rules 1973 and Section 6 of Tamilnadu combined Development Rules 2019.

How the Corporation Commissioner/Municipality Commissioner/Town Planning Officials/Building Inspector of erstwhile Pallavapuram Municipality allowed the structure to be constructed, lest how then previous old structure was then allowed to be demolished for the purpose of new religious Commercial Complex Construction(Planned in 2019 but stopped by our whistle blowing activity) and as well issue demolition proceedings order vide letter no.0452/2022/F-1 dated 16.02.2022, if there was no such infrastructure activities done earlier and intended in future ( 2 crores Commercial Complex planned for)

Why did the Appellate Authority of Pallavapuram Municipality – Commissioner and Special Officer did reply vide his letter no. ந.க.எண். 2064/2021/எப் 1 dated 16.02.2022, that "he would get the Plan Approval, title deed documents and various other revenue documents would be obtained from the Amala Annai Aalayam Authorities and then given to me the applicant under RTI Act 2005" vide RTI enquiry letter No.1001 dated 05.03.2021 and appeal letter No.1001-1 dated 20.04.2021 without the realization that he is the person who has to issue the Building Plan Approval based on the directives of CMDA and his own Superintending authorities at MAWS Department based on the N.O.C. issued by the District Collector under the relevant Acts and Rules.

How the erstwhile Pallavapuram Municipality Officials – Commissioner and Town Planning Officer turn a blind eye to all the events that culminated to this extent from 2012 to 2014, and as well in March, 2021 too, despite the various guidance and directions given from the Superintending officials in this period lest how they did not take any suo moto actions on the facts of relevance and pertinence which are glittering to take note of and act upon under the relevant acts and laws, lest take actions based on memorandum dated 22.02.2020/05.03.2020 followed by various follow up correspondences hitherto.

What motivated the Pallavapuram Municipality officials to collect property tax for the said complex and why is that they are adamant as on date not to furnish the file for review, which is a request made vide our RTI query vide our letter No.1103 and 1104 dated 03.10.2022 to understand the process of assessment of property tax as solicited through by co relating with the documents available and statutory documents need for that purpose.

Why did the Public Information Officer of Town Planning Section, Pallavapuram Municipality did reply vide his letter no. ந.க.எண்.1884/2021/எப்1 dated 29.09.2021 that they would be able to provide the details to my RTI query letter 1001 dated 05.03.2021, if I am able to provide the file number pertaining to the subject of query

It is not a contradiction of facts and circumventing the facts that the Appellate Authority - Pallavapuram Commissioner replies vide his letter No.2604 dated 21.05.2021 that "he would get the approval, title deed documents and various other revenue documents would be obtained from the applicant under RTI ACT 2005" against my same RTI enquiry letter No.1001 dated 05.03.2021 and appeal letter No.1001 -1 dated 20.04.2021

How did the entire battery of earlier Erstwhile Pallavapuram Municipality officials – Commissioner/Town Planning Officials/Revenue Inspectors/Public Information Officers are contradicting each other on record at different junctures, whereas they have been deliberate in allowing the violation of the laws and allowed the religious structure and various other amenities buildings to be raised/constructed/demolished and renovated many a times since the occupation and consecration of the church at the first instance in 1960 and thereupon, for which none is willing to take responsibility and answer lest even from the period of 2000 onwards and hitherto.

How did the Tambaram Corporation Commissioner who ought to take note as a Superintending Official with the collective responsibility factor, did not act upon our memorandums and repeated reminders in writing/personal meetings to fix the issues based on these material facts and corroborative materials which were vindicated in our memorandum as much in length and detail in the further corroborative documents submitted to them hitherto.

It is also quite appalling and obnoxious to hear from the Deputy Director – Planning that the T.P.O. of Zone –II attached to the Tambaram City Corporation have affirmatively said to him on 17.10.2022, that no such infrastructure activities said to him on 17.10.2022, that no such infrastructure activities have taken place for the last 20 years and only Rest Rooms/Toilets have been constructed (which is also a infrastructure activity to place the record straight on technical grounds of laws and rules citations), and a disgusting fact that how a Government servant would stoop to the level of absolutely camafloguing the construction activities of a religious structure that happens has been happening over the period of time for the last many a years/months lest these particular activity has started in the first week of September, 2022, with a substantiated corroborative evidence of NEWSLETTER dated 18.09.2022 having been circulated for the intended infrastructure fund driver with the specific mention of the religious structure construction and the intended money drive towards that too.

The T.P.O. as usual was at his own style of being lethargic on our complaint of the religious authorities indulging in illegal constructions, and taking philosophy class that all religious institutions do so without any plan approval and he continued to ignore my early warning as recorded in September, 3rd week 2022 when excavation was done.

The height of absolute dishonest act of the T.P.O. was very much evident with the fact that he was uttering a very wrong and false statement to the Deputy Director of Planning, that only lavatories were constructed within the campus and no such religious structure was being constructed at the disputed stoip, to which I dared the TPO, to place the proof in this regard either by video or photo but on the contrary, I produced a videography and photo proof of construction activities going at rampant speed – roof contract being laid on 04.11.2022 –video sent on 05.11.2022.

Even after this the T.P.O. did not dare to stop the illegal construction but continued to favour the violator of the law in religious costumes, which was recorded during the enquiry meetings conducted on 10.11.2022, expressing my absolute discomfort and no confidence on the functioning ethics of the T.P.O. and his team.

It is very appalling that even after the enquiry on 10.11.2022 and despite the assurance of the Commissioner, the work was not stopped and they continued to do the work at rapid speed which was ignored purportedly by the T.P.O. and his team and he delayed in issuing the stop work notice only on 21.11.2022, his stage-managed delay in issuing the stop work notice immediately after the enquiry meeting on 10.11.22 as assured by the Commissioner during the enquiry and further not issuing the Lock & Seal notice after coming to know about the continuance of the activities had indeed helped the violator to complete the building and put into practice now.

Further to the delay in the issuance of notice under section 56 and 57 of the Tamil Nadu Town Planning Act 1971. deliberately he indulged in marking a copy to the complainant for which the enquiry was conducted (though I demanded in writing before the enquiry and after the enquiry also) and avoided taking cognizance of certain sections of the Tamil Nadu Combined Building Development Rules 2019.

Even after the issuance of the notice, he did not monitor the developments, WHEREAS THE SAID BUILDING WAS FULLY COMPLETED AND INAGURATED ON DECEMBER 8th. As per their original plan and as demonstrated in their circular vide which they had demonstrated their intent to go ahead with the illegal construction without any plan approval which is very much vindicated by the fact by the issuance of notice under 56 and 57. The necessary videos and photos are enclosed for your reference which was recorded on 14.12.2022 and shown to Tambaram Municipal Corporation Commissioner P.A. too 17.12.2022 during my visit to Corporation Commissioner office followed by series of visit on 23.12.2022, 27.12.2022.

Further T.P.O. has deliberately placed the wrong information of claiming that church was constructed 10 years back after demolition of old building which existed there, but he has failed to take cognizance of various other activities taken between 2012 to 2022 as much as 7 times which are recorded in our letters cited under the reference column. Further, it has to be noted that he is duty bound to explain the reasons for such building to continue to exist whereas he has not suo motto explained whether there was planning approval/completion certificate issued by the concerned authority for the same and repeated constructions, which are deliberate and mischievous pausing of the incidences happened to claim ignorance and culpability of the deliberate collusion of minds with the violators of the laws.

The T.P.O. has deliberately avoided in providing the information about the plan approval having been given for the said commercial complex by stating that those are old buildings and no new construction has taken place. We wonder whether T.P.O. has taken the role of Ombudsman to decide that no permission is needed or to be waived for any buildings, given the nature of age of the building with the fact that they have been constructed and it is the duty of the government servant T.P.O. whether there has been any plan approval given or not without going into the merits of the type of building and age of the building and the period of the construction, which is a intended strategy on the part of the T.P.O. to make such facts as pertinent to avoid direct replies to unearth the actual truth of the facts that has/have/had happened be it during his tenure or anybody else tenure, but collective responsibility primarily falls on the Town Planning Department and the Commissioner of the incumbent period during which the said incidences ought to have taken place.

Glittering examples of rampant construction activities that have taken place in the recent years of 1 decade 2012

It is to be placed on record that various construction activities/demolition/renovation activities have taken place worth crores and crores of rupees as many time.

Large Religious Structure Building Demolished and reconstructed between 2012 -2014 at the cost of not less than 1.75 crores activity under the administration Fr. Michael Raj who is now Rector of St. Joseph's Cathedral – Chengalpet.

A huge sum of not less than 35 to 40 lakhs spent by one Fr. Solomon (late – who died in August, 2016) for infrastructure activities.

A huge sum of not less than 40 to 45 lakhs spent by one Fr. Edwin Lawrence – in 2016 -2017 for various infrastructure activities.

A huge sum of nearly 10 to 15 lakhs spent by Fr. Gnanamuthu once in 2018-2019 for construction of Tabernacle Church.

A huge sum of nearly 40 to 50 lakhs spent by Fr. Gnanamuthu once in October 2019/March 2020 and as well between January 2022 to March 2022.

Demolition Activities having taken place between February 2022 to May 2022 by Fr.Gnanamuthu.

Construction activities of setting up of Temporary Office Structures and Lavatories taken place between June and July 2022 by Fr.Packia Regis.

Recently a Religious Structure – 24 hour chapel with official intimation had been started on 15.09.2022 with the budget estimate not known.

Basis of the above submissions, we would solicit the Ombudsman to kindly adjudicate the appeal on the basis of the merits of the case as per the corroborative and material evidences put forth for your needful reference and perusal and direction to the concerned officials as applicable.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, தாம்பரம் மாநகராட்சியின் ஆணையரிடம் கோரப்பட்டது அவர் தனது 23.03.2023 நாளிட்ட அறிக்கையில்:**

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில், திரு. ரா. பிரான்சிஸ் அம்ப்ரோஸ் என்பவர் மனுவின் மீது நேரடி விசாரணை மேற்கொண்டு அதன் விவரத்தினை தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க திரு. ரா. பிரான்சிஸ் அம்ப்ரோஸ் அவர்களிடம் 10.11.2022 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு திரு. ரா. பிரான்சிஸ் அம்ப்ரோஸ் அவர்களுக்கு பதில் அனுப்பப்பட்டது. புகாரில் தெரிவிக்கப்பட்ட அனுமதியின்றி கட்டப்பட்ட அமல அன்னை ஆலயம் கூடுதல் கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு 56 (ம) 57ன் கீழ் அமல அன்னை ஆலய பேராயருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. அறிவிப்பின்பேரில் அனுமதியின்றி கட்டப்பட்ட அமல அன்னை ஆலயத்திற்கு திட்ட அனுமதி கோரி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு அமல அன்னை ஆலய பேராயரால் விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி மத வழிபாட்டு உபயோகக் கட்டடத்திற்கு திட்ட அனுமதி வழங்குவது சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டதாகும். திட்ட அனுமதி கோரும் விண்ணப்பம் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் பரிசீலனையில் உள்ளது என தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் 12.04.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 20.03.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**மனுதாரர் 12.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.**

**தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட ஜி.எஸ்.டி. சாலையில் உள்ள அமல அன்னை ஆலயம் அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ளதை தெரிவித்து தாம்பரம் மாநகராட்சியில் என்னால் புகார் மனு அளிக்கப்பட்டது. எனது புகார் மனுவின் மீது எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. மேலும் மேற்கண்ட அமல அன்னை ஆலயத்தை சார்ந்த இடத்தில் வணிக ரீதியிலான கட்டடங்களும்**

கட்டிட அனுமதியின்றி (CMDA's approval) இயங்கி வருவது குறித்தும் புகார் அளிக்கப்பட்டும் மேல் நடவடிக்கை ஏதுமில்லை. மேலும் மேற்கண்ட ஆலய வளாகத்தில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்களுக்கு அமலாக்க நடவடிக்கை (தமிழ்நாடு அரசு ஆணை 61/2008ன்படி 2 AW பூட்டுதல், கைப்பற்றுதல், இடித்தல் உட்பட நடவடிக்கைகள் உள்ளடக்கியது) மேற்கொள்ள சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தியுள்ளது. மேலும் மேற்கண்ட ஆலய வளாகத்தில் உள்ள வணிக ரீதியிலான கடைகள் கட்டப்பட்டு ஆலய நிர்வாகத்தினரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வாடகை வசூலிக்கப்படுகின்றது. எனவே, அனுமதியில்லாமல் கட்டப்படும் மேற்கண்ட அமல அன்னை ஆலய வளாகத்தில் உள்ள அனைத்து சட்டபூர்வமற்ற கட்டுமானங்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன். இந்நேர்வுகுறித்த வீடியோ காட்சிகள் மற்றும் ஒளி நகல்களையும் இது தொடர்பான ஆவணங்களின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 15.1.2023 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**தாம்பரம் மாநகராட்சியின் முதுநிலை நகரமைப்பு அலுவலர் 12.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

"மனுதாரர் திரு. ரா.பிரான்சிஸ் அம்ப்ரோஸ் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட ஜி எஸ் டி சாலையில் உள்ள அமல அன்னை ஆலயம் 1961ம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. 10 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 2011ம் ஆண்டு மேற்கண்ட ஆலயம் புதுப்பித்து கட்டப்பட்டது. மேற்கண்ட ஆலய வளாகத்தில் வணிக பயன்பாட்டில் சில கட்டடங்கள் இயங்கி வருகின்றன. மேற்கண்ட வணிகக் கட்டடங்களுக்கு இதுவரை சொத்து வரி விதிக்கப்பட்ட விவரங்கள் தெரியவில்லை. மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கண்ட ஆலய வளாகத்தில் புதிதாக வணிகக் கட்டடங்கள் ஏதும் தற்போது கட்டப்படவில்லை. மாறாக அமல அன்னை ஆலயத்தில் கிறித்துவின் துயில் அறை (Geubi) கட்டப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட துயில் அறை கட்டியது தொடர்பாக 09.11.2022 அன்று நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. மேலும் Lock and Seal Notice விரைவில் வழங்கப்படும் எனவும் அமல அன்னை ஆலயத்தில் அமைந்துள்ள வணிக வளாக கட்டடங்களுக்கு சொத்து வரி வசூலிக்கப்பட்ட விவரம் மற்றும் ஆலயத்தின் புகைப்படம் மற்றும் வீடியோ காட்சிகள் ஆகியவற்றை இரண்டு நாட்களில் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கின்றேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

மனுதாரர் புகார் மனு, அவரது வாக்குமூலம், மற்றும் தாம்பரம் மாநகராட்சி அலுவலர்களின் வாக்குமூலம் மற்றும் தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் தனது மனுவில் "தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட ஜி எஸ் டி சாலையில் உள்ள அமல அன்னை ஆலயம் அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ளது என அளித்த புகார் மனுவின்

மீது எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. மேலும் மேற்கண்ட அமல அன்னை ஆலயத்தை சார்ந்த இடத்தில் வணிக ரீதியிலான கட்டடங்களும் கட்டிட அனுமதியின்றி (CMDA's Approval) இயங்கி வருவது குறித்தும் புகார் அளிக்கப்பட்டும் மேல் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும் மேற்கண்ட ஆலய வளாகத்தில் உள்ள வணிக ரீதியிலான கடைகள் கட்டப்பட்டு ஆலய நிர்வாகத்தினரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வாடகை வசூலிக்கப்படுகின்றது எனவும் எனவே, அனுமதியில்லாமல் கட்டப்பட்டுள்ள மேற்கண்ட அமல அன்னை ஆலய வாளாகத்தில் உள்ள அனைத்து சட்டபூர்வமற்ற கட்டுமானங்களை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரியுள்ளார்.

தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட ஜி.எஸ்.டி சாலையில் உள்ள அமல அன்னை ஆலயம் 1961 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது என்பதையும் 2011 ஆம் ஆண்டு மேற்கண்ட ஆலயம் புதுப்பித்து கட்டப்பட்டுள்ளது என்பதையும் மேற்கண்ட ஆலய வளாகத்தில் வணிக பயன்பாட்டில் சில கட்டடங்கள் இயங்கி வருகின்றன என்பதையும் மேலும் புதிதாக வணிகக்கட்டடங்கள் தற்போது கட்டப்படவில்லை மாறாக அமல அன்னை ஆலயத்தில் கிறித்துவின் துயில் அறை கட்டப்பட்டுள்ளது என்பதையும் மேற்கண்ட துயில் அறை கட்டியது தொடர்பாக 09.11.2022 அன்று நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் மேலும் Lock and Seal Notice விரைவில் வழங்கப்படும் என்பதையும் தாம்பரம் மாநகராட்சியின் முதுநிலை நகரமைப்பு அலுவலரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

மனுதாரர் தனது புகார் குறித்து பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு துறைகளுக்கு மனு அளித்துள்ளது அவரது ஆதார ஆவணங்களிலிருந்து தெளிவாக அறியமுடிகிறது.

தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பல்லாவரம் பகுதி, ஜி.எஸ்.டி. சாலையில் அமைந்துள்ள அமல அண்ணை ஆலய வளாகத்தினுள் ஆலய கட்டடம், வணிகக்கட்டிடம், கெபிக்கட்டிடம் உள்ளது. 1961ல் கட்டப்பட்டு இயங்கி வந்த ஆலய கட்டடம் பழுதடைந்ததன் காரணமாக மேற்படி ஆலய கட்டடம் இடித்து அகற்றப்பட்டு 2012 ஆம் ஆண்டு புதிய ஆலய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. அமல அன்னை ஆலய வாளகத்தினுள் ஆலய நுழைவு வாயிலின் தென்புறம் தரை தளத்தில் 14 கடைகளும், முதல் தளத்தில் 14 கடைகளும் உள்ளன. ஆலய நுழைவு வாயிலின் வடக்கு புறம் 4 தரைதள வணிகக்கட்டிடங்கள் உள்ளன. விசாரணையில் இவை 20 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டவை எனவும் மேற்படி வணிகக்கட்டிடங்களுக்கு 9 வரி விதிப்புகள் உள்ளன. மேற்படி வணிகக்கட்டிடங்களின் புதிய வரிவிதிப்பு எண், பழைய வரிவிதிப்பு எண், தளம், கட்டிடத்தின் பரப்பளவு வரி விதிக்கப்பட்ட ஆண்டு அரையாண்டு வரி, கட்டிடத்தின் உபயோகம் ஆகிய விவரங்கள் அடங்கிய இணையதள வரி விதிப்பு பதிவேட்டின் நகலினை மாநகராட்சி சமர்பித்துள்ளது. ஆலய கட்டிடம் 10 ஆண்டுகளுக்கு முன்பாகவும் வணிகக்கட்டிடங்கள் 20 ஆண்டுகளுக்கு முன்பாகவும் கட்டப்பட்டுள்ளது. 2022ஆம் ஆண்டு அனுமதியின்றி 5.50 x 8.50 மீ என்ற அளவில் கூடுதலாக கட்டப்பட்டு வந்த இயேசு துயில் அறை (கெபி கட்டிடத்திற்கு) அனுமதி பெற்ற வரைப்பட நகலினை சமர்ப்பிக்கக்கோரி அமல அன்னை ஆலய பேராயருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. அறிவிப்பினை பெற்றுக்கொண்ட பேராயர் அமல அன்னை ஆலயம் மேற்படி ஆலய வளாகத்தினுள் நிலையில் உள்ள கட்டிடங்களுக்கும், புதியதாக கட்டப்பட்ட இயேசு துயில் அறைக்கும் (கெபி கட்டிடம் ) திட்ட அனுமதி கோரி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு விண்ணப்பம் செய்துள்ளதாக தெரிவித்து மாநகராட்சியால் வழங்கப்பட்ட அறிவிப்பின் மீது தொடர் நடவடிக்கையினை நிறுத்தி வைக்குமாறு 05.12.2022ம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளார். இருப்பினும்

கூடுதலாக கட்டப்பட்டுள்ள இயேசு துயில் அறையின் (கெபி கட்டிடத்தின்) அனுமதி பெற்ற வரைப்படத்தினை சமர்ப்பிக்காததால் தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57ன் கீழ் மூடி முத்திரையிடுவதற்கான அறிவிப்பு அமல அன்னை ஆலய பேராயருக்கு பதிவு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதையும் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையின் வாயிலாக அறிய முடிகிறது.

வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசாணை (பல்வகை) எண்.289 நாள்.16.12.2010–ல் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுமதியின்றி கட்டப்படும் கட்டடங்களை Tamil Nadu Town and Country Planning (Amendment) Act 2008 –ல் பிரிவுகள் 56 மற்றும் 57–ன்படி அமலாக்க நடவடிக்கை (Enforcement action) மற்றும் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலும் (Delgation of powers) stop work notice/notice calling for approval plan கட்டட உரிமையாளருக்கு கொடுக்கப்பட்டு அதன் பின்னர் விதிமுறைகளின்படி அதன் தொடர்ச்சியாக அந்தக்கட்டடத்திற்கு கட்டடம் பூட்டி மற்றும் சீல் வைக்கும் தாக்கீது (Lock and seal) வழங்கப்பட வேண்டும். மேலும் அதனைத் தொடர்ந்து அக்கட்டட பயன்பாட்டிலிருந்து வெளியேற அறிவுறுத்தும் தாக்கீது (de-occupation notice) வழங்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் அமல அன்னை ஆலய பேராயர் எந்தவிதமான தடையாணையும் பெறவில்லை என்று அறிய முடிகிறது.

இந்நேர்வில் துயில் அறை கட்டியது தொடர்பாக 09.11.2022 அன்று நோட்டீஸ் ஒன்றை மட்டும் அளித்து விட்டு பின்னர் 13.04.2023 அன்று ஒரு அறிவிப்பினை மாநகராட்சி கொடுத்துள்ளது. இடைப்பட்ட காலத்தில் எந்த வித தொடர் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இப்படி கண்டும் காணாமல் இருந்துள்ளது ஏதோ உள்நோக்கத்துடன் அலுவலர்கள் செயல்பட்டுளளனர் என்பது தெளிவாகிறது. அரசுப்பணியாற்றும் அலுவலர்கள் விதிமுறைகளை பின்பற்றாமலும் அரசின் சட்டதிட்டங்களின்படி நடக்காமலும் இருந்துள்ளனர். இது மிகவும் கண்டிக்கத்தக்கது.

மனுதாரர் புகார் அளித்ததன் அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதுவும் முறையாக எடுக்கப்படவில்லை. மேலும் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள 32 கடைகளுக்கும் முறையாக சொத்து வரி வசூலிக்கப்படவில்லை. அதில் 9 கடைகளுக்கு மட்டுமே வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 23 கடைகளுக்கு வரிவிதிப்பு செய்யப்படவில்லை. வரிவிதிப்பு செய்யப்படாத கடைகளுக்கும் வரிவிதிப்பு செய்யப்படும் என்பதை ஆணையரின் அறிக்கையிலிருந்து அறிய முடிகிறது. மேற்கண்ட சூழ்நிலையில் 2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், குறிப்பாக:

7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –
(ii) ( c) Where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules–ன்படியும், மற்றும்

12 (1) (c ) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely- (c ) refer the complaint to the appropriate authority to take disciplinary action for willful negligence or dereliction of duty of any officer or employee of the local body அடிப்படையில் இப்பொருள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காமல் இருந்துள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய கடுமையான ஒழுங்கு நடவடிக்கையினை

மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இதில் மெத்தனமாகவும் விதிகளை மீறி செயல்பட்ட நடவடிக்கைக்கும் சம்மந்தப்பட்ட கள அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும் பேராயர் அமல அன்னை ஆலயம் மேற்படிஆலய வளாகத்தினுள் நிலையில் உள்ள கட்டடங்களுக்கும் புதியதாக கட்டப்பட்ட இயேசு துயில் அறைக்கும் (செபி கட்டிடம்) திட்ட அனுமதி கோரி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு விண்ணப்பம் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக தமிழ்நாடு அரசு வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித்துறையில் வெளியிடப்பட்ட அரசாணை(பல்வகை) எண்.111 நாள் 22.06.2017ல் 3 (2) (4)ல் Filing an application for exemption under these regulations will not in any way prevent the competent authority from taking action under any of the provisions of the Act, unless otherwise ordered so by the competent authority என்று ஆணையிடப்பட்டுள்ளது. எனவே இதன்படி அனுமதியற்ற கட்டத்தின் மீது மாநகராட்சியால் மேற்கொள்ள வேண்டிய தொடர் நடவடிக்கைகளை விதிகளின்படி எடுக்க தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அவர்களை அறிவுறுத்துவதுடன் மேற்கொண்டு புதிய கட்டுமானங்கள் எதுவும் நடைபெறாவண்ணம் கண்காணித்திடவும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

It is crystal clear that the Tambaram Corporation has not taken any substantial action in this matter for years together and such indifference, inaction and silent collusion with violation of Building plan approval rules and regulations in accordance with the Tamil Nadu Town and Country Planning Act are severely censured by this Forum. The Commissioner, Tambaram Corporation and DMA are directed to initiate disciplinary action against all the delinquents involved in this issue brought to this Forum by the petitioner. There appears to be loss of revenue to the Corporation due to non-cognizance of the commercial units functioning on the campus now and earlier. All these units have to be surveyed thoroughly and appropriate taxes should be levied as per the practice and protocol of tax generation as stipulated in the Local Bodies Act, Rules and Regulations of the Tambaram Corporation. Any loss incurred so far due to non- levy and non- realisation should be made good by the management of the Church. The delinquents of the Corporation responsible for the lapse should be identified and the loss of income to the Corporation to be recovered from them also.

As directed earlier, the Commissioner is directed to ensure that no building activity on the campus should be permitted and necessary enforcement action as per the conditions and rules enshrined in the Town and Country Planning Act in addition to G.O. (Ms) No. 111, Housing and Urban Development Dept. dated 22.6.2017 as cited in the pre-page should be pursued without any loss of time.

An action taken report should be sent to this Forum within one month on receipt of the Order. The DMA is instructed to keep a strict vigil over the compliance with the Forum's orders by the Tambaram Corporation.

2023–ஆம் ஆண்டு மே திங்கள் 10–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. ரா. பிரான்ஸிஸ் அம்ப்ரோஸ்,
3, குமரபுரம், குரோம்பேட்டை,
சென்னை 600 044.

2) கூடுதல் தலைமைச் செயலாளர்,
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

4) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி,
சென்னை – 600 045.

5) இணைஇயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவி பதிவாளர்